செ.வெ.எண்: 12 /ஜுன்/2019

நாள்:03.06.2019

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் சேர மாணவ, மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் பள்ளி விடுதிகள் 42-ம், கல்லூரி விடுதிகள் மாணவியருக்கு 3-ம், மாணவருக்கு 2-ம், ஆக 5-ம், திருவெறும்பூரில் தொழிற் பயிற்சி மாணவர் விடுதி 1-ம், ராஜாகாலனியில் முதுகலை பட்டதாரி மாணவர் விடுதி 1-ம் ஆகமொத்தம் 49 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பள்ளி விடுதிகளில் 4 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளும், கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகளும், தொழிற்பயிற்சி (ITI) மாணவர் விடுதியில் தொழிற்பயிற்சி பயிலும் மாணவர்களும், முதுகலை மாணவர் விடுதியில் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களும் சேரத் தகுதியுடையவர்களாவார்கள்.

அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கும் உணவும், உறைவிடமும் இலவசமாக அளிக்கப்படும். இந்த விடுதிகளில் சேர பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விடுதிக்கும் மாணவரின் இருப்பிடத்திற்கும் 5 கி.மீ தூரம் குறையாமல் இருக்க வேண்டும். இது மாணவியர்களுக்குப் பொருந்தாது.

தகுதியுடைய மாணவ, மாணவியர்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்களிடமிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, பள்ளி விடுதிகளைப் பொறுத்தவரை 20.06.2019க்குள் சம்பந்தப்பட்ட விடுதிக் காப்பாளரிடமும் கல்லூரி விடுதிகளைப் பொறுத்தவரை 05.07.2019க்குள்** விடுதிக் காப்பாளரிடமும் சமர்பிக்கப்பட வேண்டும். உரிய காலக்கெடுவுக்குள் வரப்பெறாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**